**சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் (எச்எஸ்எஸ்) தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஐ) நிகழ்ச்சித்திட்டம் - 2014**

சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஐ) நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என்பவற்றுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட 2013 யூன் 19 ஆம் திகதிய மானிய உடன்படிக்கையின் 36 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஐ) நிகழ்ச்சித்திட்டத்தின் விண்ணப்பப்படிவம் 2007 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக முன்னைய சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சு உள்ளது. தாய் மற்றும் சேய் சுகாதார சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தல் மூலம் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள தாய் மற்றும் சேய் சுகாதாரத்துடன் தொடர்புடைய நோயுற்றல் மற்றும் இறப்பு வீதத்திலான குறைவினை துரிதப்படுத்தலே நிகழ்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன.

(i) 2015 ஆம் ஆண்டளவில் தேசிய விதிமுறையை அடைவதற்கு 10 பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நலன்புரி பதவியணியினரின் சரியான திறன் கலவையினை அதிகரித்தல்.

(ii) 2015 ஆம் ஆண்டளவில் தாய் மற்றும் சேய் சுகாதார சேவை வழங்கலிற்கான 10 பின்தங்கிய மாவட்டங்களின் தேசிய நியமங்களை ஈடுசெய்வதற்கான உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளின் கிடைத்தகு தன்மையினை உறுதிப்படுத்தல்.

(iii) 2015 திசெம்பர் அளவில் நடுத்தர மட்ட வசதி முகாமையாளர்களால் 10 பின் தங்கிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தாய் மற்றும் சேய் சகாதார சேவைகளின் மீதான போதிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையினை உறுதிப்படுத்தல்.

ஜீஏவீஐ (எச்எஸ்எஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் விண்ணப்ப படிவம் - 2007 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 4.51 மில்லியனிற்குச் சமனான ரூபா 516.7 மில்லியனானதுடன், முழுத்தொகையும் தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பினால் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படவேண்டுமெனப் பட்டியலிடப்பட்டது. தொடர்ந்து, 2015 திசெம்பர் 31

வரை 03 சந்தர்ப்பங்களில் நிகழ்சித்திட்ட காலமானது நீடிப்பு செய்யப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்குகின்றனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் நன்கொடையளிக்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதுவும்,

(ஐ) ஜீஏவீஜ விண்ணப்ப படிவம் - 2007 இல் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) ஜீஏவீஐ விண்ணப்பப்படிவம் - 2007 இல் குறித்துரைக்கப்பட்ட நிதி அளவீடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றானது செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்களை தெளிவாக பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 204,240 ஆன மீண்டெழும் செலவினமானது தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிகழ்ச்சித்திட்டத்தின் காசு மானிய உடன்படிக்கையின் 30 மற்றும் 34 ஆம் பந்திகளுக்கமைய மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மீதான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்படு

நிதியளிப்பு, மீளாய்வான்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான மீளாய்வாண்டின் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் வழங்குவதற்கென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண் டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ள ப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஏவீஜ கூட்டமைப்பு | 4.5 | 516.7 | 150.0 | 1.0 | 107.9 | 4.0 | 489.2 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 7.0 | 0.1 | 6.2 | 0.1 | 6.2 |
| மொத்தம் | **4.5** | **516.7** | **157.0** | **1.1** | **114.1** | **4.1** | **495.4** |

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையான செயற்திட்டக் காலத்தினையும் உள்ளடக்கியதாக மாதாந்த, காலாண்டு, அரையாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குடன் முழுமையான விபரமான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், செயற்திட்டத்தின் செயலாற்றலை நடவடிக்கைத்திட்டத்துடன் ஒப்பிட்டு மதிப்பாய்வு செய்யக்கூடிய வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினுள் ரூபா 7,155,214 கிரயத்தில் அமுல்படுத்தப்பட வேண்டுமென பட்டியல் படுத்தப்பட்டிருந்த 08 நடவடிக்கைகளில் 03 நடவடிக்கைகளின் பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் ரூபா 1,426,302 கூட்டுத்தொகையான முற்பணமானது சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் பணிப்பாளர் (திட்டமிடல்), குடும்ப சுகாதார பணிமனைக்கும் திருகோணமலை சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், மீளாய்வாண்டினுள் எதுவித செயற்பாடுகளும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டினுள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய 03 நடவடிக்கைகளின் அமுலாக்கலுக்கென ரூபா 381,132 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 2014 திசெம்பர் 31 வரையில் ரூபா 149,845 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. குறித்த நடவடிக்கைகளின் நிதி பயன்பாடு மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் என்பவை முறையே 23 சதவீதம்

தொடக்கம் 56 சதவீதம் வரை மற்றும் 40 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் வரையான வீச்செல்லையில் இருந்தன.

(ஈ) கிடைக்கப்பெற்ற சான்றுகளின் பிரகாரம், வவுனியாவிலுள்ள கிராமோதய சுகாதார நிலையத்தின் 02 புனரமைப்பு பணிகள் நிதிகளின் பற்றாக்குறை காரணமாக திட்டமிடப்பட்டவாறு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், வவுனியாவில் 03 கிணறுகளை ஆழமாக்கும் செயற்பாடானது பிரதேசத்தில் நிலவிய வெள்ளம் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

**3.3 நிதிக் கட்டுப்பாடுகளிலான பிரச்சினைகள்**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 170,973,209 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துப்பதிவேடொன்று நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தால் 2012 ஆம் ஆண்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு நடைபெற்றிருக்கவில்லை, இதன் விளைவாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த சொத்துக்களின் பௌதீக இருப்பினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.